1989 நவம்பர் 2]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களுடைய சட்டங்களிலே மாற்றங்கள் கொண்டு வரவேண்டிய ஒரு காலம் ஏற்பட்டு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய அனுபவம். பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய செனட் கூட்டத்திலே நானும் திரு. மோகன் அவர்களும் பங்கெடுத்து, நாங்கள் எங்களுடைய சில ஆலோசனைகளை அங்கே குறிப்பிட்டு இருக்கிறோம். ஆனால் சிண்டிகேட் தான் எல்லாவித மான காரியங்களுக்கும் இருக்கும்படியான ஒரே அதிகார ஊற்று மையமாக இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. செனட் கூட்டம் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை—நம்முடைய சட்டமன்றம் ஆறுமாதத்திற்குள்ளாக, ஒரு தடவை கூடித் தீரவேண்டும் என்ற அதே முறையில்—நடப்பது என்பது சரியல்ல. கல்வித் துறையிலும், அதனுடைய அமைப்புத் துறையிலும், பயிற்சித் துறையிலும் பல விவரங்களைச் சொல்லி விவாதிக்கவேண்டிய அந்தப் பெரும் சபையினுடைய கூட்டத்தை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டும்படியான ஒரு திருத்தத்தை நமது அரசாங்கம் கொண்டு வருவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா ? அதைச் செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி, செய்யப்படுமா ?

9-40 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல செனட் கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவது பற்றி அரசு பரிசீலிக்கும். சட்டத் திருத்தம் வருகிறபோது அதை இடம் பெறச் செய்ய முடியுமா என்பது நிச்சயமாகக் கருதப்படும். ஆனால் செனட் என்பது ஆலோசனைக் குழுதான். சிண்டிகேட் என்பதுதான் ஆட்சிக் குழு. சிண்டிகேட்—ஆட்சிக் குழு என்பது அமைச்சரவையைப் போல ; செனட் என்பது சட்டமன்றம் போல. சில நேரங்களில் சட்டமன்றத்தினுடைய குரல் அதிகமாகி அமைச்சரவை வேலை தடைப்படுவதும் உண்டு. எனவே, அவற்றைப் பொறுத்து எந்த வகையில் செயல்படுத்த முடியும் என்பது மேலும் மேலும்—கல்வித் துறையைப் பொறுத்தவரையில் it is always in an experimental stage என்பதால் மேலும் மேலும்—ஆராயப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

விராலிமலை சுப்பிரமணிய சுவாமி ஆலயத் தேர்.

*948. திரு. வெ. இராசு : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சொந்தமான தேர் பழுது அடைந்துள்ளதை சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விராலிமலை திருக்கோவிலுக்குச் சொந்தமான தேரினைத் திருப்பணி செய்வதற்கு செயல் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் நீண்ட நெடுங்காலமாக 1985ஆம் ஆண்டிலிருந்து அறநிலையத் துறை ஆணையரின் கோப்பிலே இருக்கிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலுக்குச் சொந்தமான தேரினைப் பழுதுபார்க்க திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு ரூ. 1,50,000-க்கு நிர்வாக அனுமதி 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதியிலுள்ள விராலிமலையில் அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அந்த வட்டாரத்திலுள்ள மக்களால் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேரினை வருகின்ற திருவிழாக் காலங்களிலே சீர் செய்து ஓட்டுவதற்கு விரைவில் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

(பதில் இல்லை).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி.

***2557. திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு வேளாண்மைத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?